பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 02 2026** **6 45**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துரையாடும் பரிக்ஷா பே சர்ச்சா இன்று காலை நடைபெற உள்ளது.

**2.** விரைவு நீதிமன்றங்கள் மூலமாக ஏராளமான வழக்குகளுக்கு விரைவாக தீர்வு காணப்பட்டு வருவதாக மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன் ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

**3.** உயர்கல்வியில் அகில இந்திய அளவில் அண்ணா பல்கலைக்கழகம் சிறந்து விளங்குவதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

**4.** தமிழகத்தில் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை பலப்படுத்துவதே பிஜேபியின் நோக்கம் என்று அக்கட்சியின் தேசிய மகளிரணி தலைவர் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

**5.** **19** வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி கலந்துரையாடும் தனித்துவமான நிகழ்ச்சியான பரிக்ஷா பே சர்ச்சா இன்று காலை 10 மணிக்குத் தொடங்கவுள்ளது.

தேர்வுகள் குறித்த அழுத்தத்தைப் பற்றி விவாதித்து அதைப் போக்கவும், தேர்வுகளை ஒரு உற்சவமாக எதிர்கொள்ளவும் இந்த கலந்துரையாடல் உதவும்.

இந்த நிகழ்வு பிரதமர் திரு நரேந்திர மோடியின் யூடியூப் அலைவரிசை, தூர்தர்ஷன் தொலைக்காட்சி, கல்வி அமைச்சகத்தின் சமூக ஊடக தளங்களில் நேரடியாக ஒளிபரப்பப்படும்.

இது தவிர, வேவ்ஸ் ஓடிடி, அமேசான் பிரைம் வீடியோ, ஜியோ, ஜீ5, சோனி லைவ், ஸ்பாட்டிஃபை ஆடியோ தளம் போன்ற ஓடிடி தளங்கள் இந்த கலந்துரையாடல் நிகழ்வை நேரடியாக ஒளிபரப்ப உள்ளன.

பிரதமரால் வடிவமைக்கப்பட்ட பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்வு, துடிப்பானதாகவும் புதுமையானதாகவும், ஒவ்வொரு ஆண்டும் புதிய அம்சங்களை அறிமுகப்படுத்தி வருகிறது.

முதல் முறையாக, நாட்டின் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கிய வகையில் தில்லியைத் தவிர தமிழ்நாட்டின் கோயம்புத்தூர், சத்தீஸ்கரின் ராய்ப்பூர், குஜராத்தின் தேவ் மோக்ரா, அசாமின் குவஹாத்தி என நாட்டின் அனைத்து பகுதிகளை உள்ளடக்கிய வகையில் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

பரிக்ஷா பே சர்ச்சா 2026-க்கு முன்னதாக, நாடு முழுவதும் உள்ள பள்ளிகளில் மாணவர்களை மையமாகக் கொண்ட நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டன.

இதில் தற்சார்பு உணர்வை ஊக்குவிக்கும் ஓட்டம், வினாடி-வினா, எழுத்துப் போட்டிகள் நடத்தப்பட்டன.

இந்த நடவடிக்கைகளில் சுமார் 4 புள்ளி எட்டு ஒன்று கோடி மாணவர்கள் பங்கேற்றனர்.

<<<<>>>>

தமிழகத்தில் செயல்பட்டு வரும் 73 விரைவு நீதிமன்றங்கள் மூலம் கடந்த 3 ஆண்டுகளில் 87 ஆயிரத்து 796 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாக மத்திய சட்டத்துறை இணையமைச்சர் திரு. அர்ஜுன்ராம் மெக்வால் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், நாடு முழுவதும் கடந்த டிசம்பர் மாதம் வரை 880 விரைவு நீதிமன்றங்கள் செயல்பட்டு வருவதாக கூறினார்.

விரைவு நீதிமன்றங்கள் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைக்க உதவி செய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

உயர்நீதிமன்றங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களின்படி கடந்த 3 ஆண்டுகளில் நாடு முழுவதும் விரைவு நீதிமன்றங்கள் மூலமாக 40 லட்சத்து 26 ஆயிரத்து 982 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டுள்ளது என்றும் அவர கூறினார்.

<<<<>>>>

உயர்கல்வியில் அகில இந்திய அளவில் அண்ணா பல்கலைக்கழகம் சிறந்து விளங்குவதாக மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

அண்ணா பல்கலைக்கழக கிண்டி பொறியியல் கல்லூரியின் பட்டமளிப்பு விழாவில் நேற்று உரையாற்றிய அவர், இந்தப் பல்கலைக்கழகம் உலகத்தர வரிசையில் 465வது இடத்திலும், இந்திய பல்கலைக்கழக தரவரிசையில் 10வது இடத்திலும் உள்ளது என்று கூறினார்.

தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு பட்டியலில் அண்ணா பல்கலைக்கழகம் 2வது இடத்தில் உள்ளதாகவும், ஆராய்ச்சி உள்ளிட்ட பல்வேறு பணிகளில் இப்பல்லைக்கழகம் முதன்மையான கல்வி நிறுவனமாக திகழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

அண்ணா பல்கலைக்கழகத்தின் உள்கட்டமைப்பு மற்றும் ஆய்வக மேம்பாட்டிற்காகவும், புதிய ஆராய்ச்சிப் பூங்கா உள்ளிட்ட நவீன வசதிகளை ஏற்படுத்த மாநில அரசு 500 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதாகவும் திரு. கோவி. செழியன் கூறினார்.

<<<<>>>>

சட்டப்பேரவைத் தேர்தலை சந்திக்க பிஜேபி ஆயத்தமாகி வருவதாக அக்கட்சியின் தேசிய மகளிரணி தலைவர் திருமதி வானதி சீனிவாசன் தெரிவித்துள்ளார்.

திருப்பூரில் நேற்று பிஜேபி மண்டல நிர்வாகிகள் கூட்டத்தில் பேசிய அவர், 234 தொகுதிகளிலும் தேர்தல் பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் அஇஅதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை பலப்படுத்துவதே பிஜேபியின் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

மின் கட்டணம், சொத்து வரி உயர்வு, குப்பை வரி என பல்வேறு வரி உயர்வால் தமிழக மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் திருமதி வானதி சீனிவாசன் கூறினார்.

<<<<>>>>

தமிக சட்டப்பேரவைத் தேர்தலில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கடந்த தேர்தலைவிட கூடுதல் இடங்களில் போட்டியிடும் என்று அக்கட்சியின் மாநில செயலாளர் திரு. பெ. சண்முகம் தெரிவித்துள்ளார்.

நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக தலைமையிலான கூட்டணி வலுவாகவும், ஒற்றுமையாகவும் இருப்பதாக கூறினார்.

கரூர் சம்பவத்திற்குப் பிறகு த.வெ.க. தலைவர் திரு. விஜய், மத்திய அரசை விமர்சனம் செய்து பேசுவதை தவிர்த்து வருவதாகவும், சிபிஐ பிடியில் அவர் சிக்கியுள்ளதாகவும் குற்றம் சாட்டினார்.

<<<<>>>>

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக் கட்சித் தலைவர்கள் பங்கேற்கும் மாபெரும் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் இம்மாதம்

28ஆம் தேதி மதுரையில் நடைபெற உள்ளதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

மதுரையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக தலைமையிலான கூட்டணியில் தொடர்ந்து மோதல் நடைபெற்று வருவதாக கூறினார்.

அந்தக் கூட்டணியில் காங்கிரஸ் தொடர்ந்து நீடிப்பதில் பிரச்சினை இருப்பதால்தான் திமுக மூத்த தலைவர்களில் ஒருவரான திருமதி கனிமொழி காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தியை சந்தித்து பேசியிருக்கிறார் என்றும் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்தார்.

<<<<>>>>

தமிழகத்தில் தீயணைப்புத் துறை சார்பில் அடுக்குமாடி குடியிருப்புகள், தொழிற்சாலைகள், வர்த்தக வளாகங்கள், திரையரங்குகள் மற்றும் பள்ளிகளில் பணிபுரியும் தனியார் பாதுகாவலர்களுக்கு தீ பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு வகுப்புகள், வரும் 9-ஆம் தேதி நடத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தீ விபத்துகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது, தீ விபத்து ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் போன்றவை

குறித்து இதில் பயிற்சி அளிக்கப்படவுள்ளதாக தீயணைப்புத் துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்தப் பயிற்சி முற்றிலும் இலவசமானது என்றும், இதற்கு முன்பதிவு தேவையில்லை என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<>>>>

நாகை மாவட்டத்தில் ஆலிவ் ரெட்லி எனப்படும் அரியவகை கடல் ஆமைகளின் முட்டைகளை சேகரிக்கும் பணிகள் தொடங்கியுள்ளது.

பறவைகள் மற்றும் இதர விலங்குகளிடமிருந்து இந்த முட்டைகளைப் பாதுகாக்கும் பணியில் வனத்துறையினர் ஈடுபட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Selvan Jebaraj - 50 Sec)**

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

ஆஃப்கனிஸ்தானில் நேற்றிரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் நான்கு புள்ளி 3ஆக பதிவானது.

---------------

கிரீஸ் அருகே நடுக்கடலில் அகதிகளை ஏற்றிச் சென்ற படகு கவிழ்ந்ததில் 15 பேர் உயிரிழந்தனர்.

---------------

சட்டவிரோத சுரங்கங்கள் தொடர்பாக மேகாலயா அரசிடமிருந்து அறிக்கை கேட்கப்பட்டள்ளதாக மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

---------------

குஜராத் மாநிலத்தில் உள்ள புஜ் ராணுவ மருத்துவமனையில் நடைபெற்று வரும் கண் அறுவை சிகிச்சை முகாமை பாதுகாப்புத்துறை செயலர் திரு. ராஜேஷ்குமார் சிங் நேற்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---------------

தஞ்சாவூர் அருகே பிள்ளையார்பட்டியில் கொடிக்கம்பம் நடும் பணியின்போது மின்சாரம் தாக்கி 2 தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.

---------------

ராமநாதபுரம் புத்தக திருவிழாவில் 2 கோடியே 18 லட்சம் ரூபாய் மதிப்புள்ள புத்தகங்கள் விற்பனையாகியுள்ளதாக மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜித் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

---------------

திருநெல்வேலி மாவட்டம் நாங்குநேரி வடக்குப் பச்சையாறு நீர்த்தேக்கத்தில் இருந்து பிசான பருவ சாகுபடிக்காக இன்று முதல் 54 நாட்களுக்கு தண்ணீர் திறந்துவிடப்படப்பட உள்ளது.

---------------

என் கனவு - என் எதிர்காலம் என்ற இணையதளத்தின் வாயிலாக தமிழக இளைஞர்கள் தங்களின் கனவுகளை பதிவு செய்யுமாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

---------------

சென்னைக்கு அருகே நடுக்கடலில் உடல்நலம் பாதிக்கப்பட்ட 45 வயது மதிக்கத்தக்க மீனவரை கடலோர காவல்படையினர் பத்திரமாக மீட்டு மருத்துவமனையில் சேர்த்தனர்.

---------------

சென்னையில் தூய்மைப் பணியாளர்களுக்கு மழைநீர் வடிகால் பராமரிப்பு குறித்து மாநகராட்சி சார்பில் பயிற்சி அளிக்கப்பட்டது.

---------------

*விளையாட்டுச் செய்திகள்*

**19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.**

**ஜிம்பாப்வேயின் ஹராரேயில் பிற்பகல் 1 மணிக்கு இந்தப் போட்டி தொடங்குகிறது.**

**--------------**

**மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்று கோப்பையை கைப்பற்றியது.**

**வதோதராவில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் விளையடிய தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 203 ரன் எடுத்தது.**

**204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி 2 பந்துகள் மீதமிருக்கையில் 4 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி வெற்றி பெற்றது.**

**-------------**

**ஆசிய பேட்மிண்டன் அணிகள் சாம்பியன் போட்டியில் நடப்பு சாம்பியனான இந்தியா இன்று காலிறுதியில் சீனாவை எதிர்கொள்கிறது.**

**சீனாவின் Qingdao நகரில் இப்போட்டி நடைபெற உள்ளது.**

**இந்திய ஆடவர் அணி காலிறுதியில் தென்கொரியாவை எதிர்கொள்ள உள்ளது.**

**<<<<The End>>>>**